சத்திய வேத

# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

வருகிறது!

மறைக்கல்வித் தினமும்
கிறிஸ்தவ திருமறைக் கல்விச் சபையின்
திருவிழாவும் — 6-6-1971

96-ம் புத். | 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் 29-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 18-ம் இல

# கிறிஸ்தவதிருமறைக்கல்விச்சபையின் திருவிழா

**மாநாட்டின் நினைவிலே :**

கடந்தவருடம் மார்கழித் திங்கள் 15-ம், 16-ம் நாட்களிலே யாழ்நகரிலே அகில இலங்கை மறைக்கல்வி மகாநாடு ஒன்று நடந்தேறியது பற்றியும், மகாநாட்டில் முக்கிய குறிக்கோளாக தற்போதைய பாடசாலைச் சூழ்நிலையில், கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு மறைக்கல்வி ஊட்டுதல், அவர்களைக் கிறிஸ்துவில் உருவாக்கல் போன்ற விடயங்களில் ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பங்களும் எடுக்க வேண்டிய இடம் என்ன? என்ற கருத்து, கவனத்திற்குரிய முறையிலே ஆராயப்பட்டதுபற்றியும், மகாநாட்டின் அங்கத்தவர்களும், அவர்கள் மூலமாக அகில இலங்கைக் கிறிஸ்தவ சமுதாயம் முழுவதுமே நன்கு அறிந்து உணர்ந்திருக்கும் என்பது உண்மை.

ஆராயப்பட்ட கருத்துக்கள் ஆக்கபூர்வமாக மக்கள் மத்தியிலே செயல்படுவதற்கு மகாநாட்டின் இறுதியிலே எட்டுத் தீர்மானங்களாக உருவெடுத்தன. இத்தீர்மானங்கள் நமது குடும்பங்களிலே, பங்குகளிலே பட்டணங்களிலே, ஏன் அகில இலங்கையிலுமே உருவெடுத்துச் செயல்படும் பொழுதுதான், உண்மையிலேயே நாம் மகாநாட்டின் பூரணத்துவத்தைக் கண்டவர்களாவோம். இத்தீர்மானத் தொகுப்பின் முக்கிய இடத்தை வகுப்பதுதான் நாம் விழா எடுக்கும் கிறிஸ்தவ திருமறைக்கல்விச் சபை. ஆம்; இச்சபை, ஒவ்வொரு விசாரணைப் பங்கிலும் முதன்மையான முறையிலே நிறுவப்பட்டுச் செயல்பட வேண்டும்.

**கிறிஸ்துவின் போதனையிலே :**

அன்பைப் பெருக்கி என் ஆருயிரைக் காக்கவந்த இன்பப் பெருக்காம் கிறிஸ்து பெருமான் அன்றொருநாள் அப்போஸ்தலர் (ஒவ்வொரு கிறிஸ்தவனும் திருமறையின் அப்போஸ்தலன்)களுக்கு இட்ட பணி: "புறப்படுங்கள், போதியுங்கள், எல்லா இனத்தாரையும் என் சீடராக்குங்கள்" என்பதே. ஆம், இந்த அப்போஸ்தலபணி, மறைபரப்பு வேலை, இன்றைய சூழ்நிலையிலே, திறமையாகச் செயல்பட வேண்டுமானால் ஒவ்வொரு பங்கிலும் கிறிஸ்தவ திருமறைக் கல்விச்சபை உருவாக வேண்டுமன்றோ. இச்சபையின் முக்கியத்துவத்தை ஏற்கனவே அறிந்த திருச்சபைத்தாய், தனது திருச்சட்ட நூலின் 711-வது ஒழுங்கிலே இதன் தேவையைச் சுட்டிக்காட்டி இருக்கின்றாள். பிள்ளைகளின் மறைக்கல்விப் பயிற்சி, கிறிஸ்தவ உருவாக்கல், பாடசாலை ஆசிரியர்களிலே, கன்னியர்களிலே, சந்நியாசிகளிலே தங்கியிட்ட காரணத்தினாலோ என்னவோ பெற்றோர்களின் முக்கியம் வாய்ந்த இப்பக்திச் சபையின் வளர்ச்சி நமது நாட்டிலே, மங்கி, ஏன், மறைந்து விட்டது என்று தான் கூறவேண்டும். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றிருக்கும் இக்காலத்தில், திருச்சபை மீண்டும் இதன் தேவையை உணர்ந்திருக்கின்றது.

**திருச்சங்க ஒளியிலே :**

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கக் கொள்கைத் திரட்டின், ஆயர் மெய்ப்புப் பணித் தொகுப்பிலே(30), விசுவாசிகளுக்கு மறைக்கல்விப் பயிற்சியை, மீட்பின் மறைபொருளின் நிறைந்த அறிவை, கொடுப்பதற்கு உதவியாக கிறிஸ்தவ திருமறைக் கல்விச்சபை ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இக்கருத்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## "மெசெஞ்சர்" பத்திரிகையின் புதிய பத்திராசிரியர்

1968-ம் ஆண்டு தொடக்கமாக இலங்கைக் கத்தோலிக்க வாராந்த ஆங்கிலப் பத்திரிகையின் அதிபராகக் கடமையாற்றி வந்த வணக்கத்துக்குரிய ஜோ. நெதிசிங்க சுவாமியாரின் இடத்தில் அப்பத்திரிகையின் ஆசிரியராக வணக்கத்துக்குரிய கலாநிதி இக்னேஷஸ் கம்லாத் அடிகள் நியமனம் செய்யப்பட்டு இக்கடமையைச் சென்றவாரம் தொடக்கமாக நடத்திவருகின்றார். அவர் இதற்கென சில வருஷங்கள் அயர்லாந்து தேசத்தில் பயிற்சிபெற்றிருக்கிறார். மெசெஞ்சர் பத்திரிகையின் சகோதர சிங்கள கத்தோலிக்க பத்திரிகையான ஞானார்த்த பிரதீபயத்தின் ஆசிரியராகவும் கடமையாற்றியவர். திருச்சபையின் புதுப்பித்தல் வேலையில் பங்குபெறுவதற்கென அண்மையில் மனில்லா நகரில் 4 வார காலமாக நடந்த ஆராய்ச்சிகளிலும் பங்கு பெற்றவர்.

## உலக தொடர்பு சாதனத்தின் பாப்பரசரின் செய்தி

உலக தொடர்பு சாதனங்களின் தினமாக இம்மாதம் 23-ம் திகதி கொண்டாடப்படக் குறிக்கப்பட்டிருந்ததை நேயர்கள் அறிவர். அன்று தினம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் உலகுக்கு அனுப்பியிருந்த விசேஷ செய்தியில் உலக தொடர்பு சாதனங்களின் மூலமாகத் தொண்டாற்றிக்கொள்பவர்களை மனித சமாதானத்தைத் தூண்டிக்கும் கருமங்கள் யாவற்றையும், மனிதர்களின் கடமைகளையும் உரிமைகளையும் மறைத்துவைப்பன எல்லாவற்றையும், மனிதர்களுக்கிடையில் வெறுப்பையும் தப்பபிப்பிராயத்தையும் உண்டாக்கும் எவற்றையும் ஒதுக்கி வைக்குமாறு கேட்டிருக்கிறார். எங்கும் சமாதானம் நிலவவும் சகோதர உணர்ச்சி பரவவும் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்குமாறு பரிசுத்த தந்தை உலக தொடர்பு சாதன சேவையாளர்களுக்கு விசேஷ விண்ணப்பம் செய்திருக்கிறார்.

## கருதினல் அகாஜியானியன் காலமானார்

இரு வாரங்களுக்குமுன் கருதினல் அகாஜியானியன் காலமானார் என்ற துக்கசங்கதி உலக கத்தோலிக்க மக்களை மாத்திரமல்ல, பல்லாயிர பிறசமய மக்களையும் ஆழ்ந்த துயரத்தில் அமிழ்த்திவிட்டது. சமீபகாலத்தில் கருதினல்மார் எவரிலும் பார்க்க உலக மக்களின் கவனத்தை தம்மால் ஈர்த்துக்கொண்டவர் கருதினல் அகாஜியானியனே. வேதப்பரப்புதல் சபையின் தலைவராக அவர் பல வருட காலம் செய்துவந்த சேவை அவரை உலக மக்கள் நன்கு அறியச்செய்துவிட்டது. அவரது தொண்டு அவரை உலகின் பல கோணங்களுக்கும் இட்டுச் சென்றது. 1960 ஆம் ஆண்டு அவர் இலங்கைக்கு வந்து, 3 நாட்கள் தங்கிச் சென்றார். அத்தருணம் அவர் கத்தோலிக்க மக்களால் மாத்திரமல்ல பிறசமய மக்களாலும் சங்மானிக்கப்பட்டவர். கொழும்பு மாநகரசபையினர் அவருக்கு விசேஷ மரியாதை அளித்தனர். நமது நாட்டு மகா தேசாதிபதி, பிரதமர் முதலியவர்களையும் சந்தித்து உறவாடிக் கொண்டவர். ருஷியா தேசத்துக்குரிய ஒரு பிரிவாகிய ஜோர்ஜியாவில் பிறந்தவர். இறக்கும் போது அவருக்கு வயது 76. உலக மக்கள் யாவருக்காகவும் அயராது உழைத்த கருதினலடிகளுக்காக மன்றாடிக்கொள்வது எமது கடமையாகும்.

## புனரமைப்பு வேலையில் சிலாப மேற்றிராசனத்தின் உதவி

சிலாப மேற்றிராசன குருமாரின் செனெற் குழு சென்றவாரம் நடத்திய விசேஷ கூட்டத்தில் எமது நாட்டில் அண்மையில் நடைபெற்ற வன்முறைக் குழப்பங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாமென ஆலோசிக்கப்பட்டது. வன்முறைக் குழப்பங்கள் அம்மேற்றிராசனப் பகுதியிலும் நடைபெற்றிருப்பதனால், காலதாமதமின்றிபுனரமைப்பு வேலைக்கென அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் குழுவினருடன் தொடர்புகொண்டு, அவர்களுக்குத் தமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களை அறிவித்து, தம்மாலான நிதியைத் திரட்டி அளித்து, மக்களுக்கு உதவி செய்ய முடிவு செய்யப்பட்டது. நிதி திரட்டும் முறைகளில் ஒன்றாக ஒரு ஞாயிறு தினத்தை இதற்கெனக் குறிப்பிட்டு, அன்று விசுவாசிகளிடம் சேர்க்கப்படும் தருமப் பணத்தை புனரமைப்பு வேலைக்கும், உயிரிழந்த பாதுகாப்புப் படையினர் குடும்ப உதவிக்கும் அரசாங்கத்தின் மூலம் கொடுத்துதவவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## சென் வின்சென்டி போல் சபையில் பிறசமயத்தவரும் சேர்கின்றனர்

இங்கிலாந்து தேசத்தில் சில பகுதிகளில் ஆங்காங்கேயுள்ள சென் வின்சென்டி போல் சபைகளில் பிறசமயத்தவர்களையும் சேர்த்துக்கொள்கின்றனர். பிரென்ற்வூட் பகுதியிலும், நொதாம்ரன் பகுதியிலும் அப்பகுதிகளின் மேற்றிராணிமாரின் அனுமதியுடன் பிறசமயத்தவர் கத்தோலிக்கருடன் தொண்டாற்றி வருகின்றனர். இவ்வாறு மேற்றிராணிமாரின் அனுமதியுடன் பிறசமயத்தவர்களைச் சேர்த்துக்கொள்ளலாமென அகில இங்கிலாந்து தேச தேசிய சென் வின்சென்டி போல் சபை சென்ற வருடாந்த கூட்டத்தில் முடிவு செய்திருந்தது.

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

## பரிசுத்த ஆவி காலைக் கீதம்

**BEATA NOBIS GAUDIA**

அழியா மகிழ்வின் பாக்கியமே
ஆண்டு தோறும் அளித்திடவே
ஆறுதலளிக்கும் ஆவியவர்
அப்போஸ்தலர் மேல் இறங்கினரே;

தீக்கிளை வளியோடொளி கிளர
நாக்கினுருவிற் ருேன்றினரே
வாக்கிய நிறைவு தந்திடவே
யோக்கிய அன்பு எரிந்திடவே;

பலரின் பாசைகள் பேசினரே
உலர்ந்து நின்ருர் அந்நியரே
மலர்ந்தே ஆவி நிறைத்தவரை
நிலமேல் வெறியர் என்றனரே.

கடப்பின் காலம் கழிந்தபின்னே
நடந்த இதன்பொருள் இரகசியம்
சட்டப்படியே மன்னிப்புத்
திட்டமளிக்கும் புனித தினம்.

பக்திஅருளும் பரம் பொருளே
சித்தம் பணிந்துமை வேண்டுகிறேம்
முத்திசேர் ஆவியின் வாழ்வுதரும்
கொத்தாம் கொடைகள் அளித்தருளும்;

நிறைவாய் நேர்ந்த இதயமெலாம்
குறையாதருளைப் பெற்றனவே
இறைவா தருவீர் அமைதியுகம்
பொறுப்பீர் எங்கள் தவறெல்லாம்.

தேவ தந்தைக்கே மகிமை
சாவினின்றே உயிர்த் தெழுந்த
சேயனேடு சதா காலம்
நேயனுக்கும் உரித்தாமே.

—ஆமென்.

## பரிசுத்த ஆவி மாலைக் கீதம்

**VENI CREATOR SPIRITUS**

உருவை அளிக்கும் ஆவியே
வருக அடியோர் மனதிலே
அருளே வானின் நிறையவே
தருக நீர் செய் உளங்களில்;

தேற்றுகிறவர் எனப் பெயர்
சாற்றும் கடவுள் கொடைநீரே
ஊற்றும், நெருப்பும், அன்பும்நீர்
போற்றும் ஆன்ம பூச்சும்நீர்.

கொடைகள் ஏழும் தருகின்ற
தடையிலாத தேவ வலம்
அடியவர்க்கு எந்தை அருள்
முடிவிலாத போதனை நீர்;

பற்றும் ஒளியால் மனம் எரிய
முற்றும் அன்பால் உளம் நிறைய
வெற்ரும் உடலின் ஈனமதை
வற்ருத உதவி தந்து தேற்றும்.

எதிரி தூர அகன்றிடவே
எதிரில் அமைதி தோன்றிடவே
பதியா யெமை நீர் வழிநடத்த
மதியா தீமை நீங்கிடுவோம்.

தந்தையோடு மைந்தனையும்
உந்தனருளால் அறிவோமே
சொந்தம் அவர்கள் ஆவியுமை
எந்தநாளும் விசுவசிப்போம்.

தேவ தந்தைக்கே மகிமை
சாவினின்றே உயிர்த் தெழுந்த
சேயனேடு சதா காலம்
நேயனுக்கும் உரித்தாமே;

—ஆமென்.

# மந்தையைத் தேடிவந்த ஆயன்

"நானே நல்ல ஆயன்; நான் என் ஆடுகளை அறிவேன். அவைகளும் என் குரற்சத்தத்தை அறியும்." (புனி. அரு.) 10-ம்அதி. 14-ம் வசனம்) நம் அன்பின் இரட்சகரின் இவ்வமிர்த வாக்கை, இன்று நம் ஆயராம் பாப்பரசர், தம் மந்தைகளான இலங்கைக் கிறீஸ்தவர்களுக்கு பெருமையுடன் சுவிசேஷம் வழியாகக் கூறிச் சந்தோஷப்பட்டார். இவ்வாறு கூறுவது அவரது உரிமையும் கடமையுமாகும். ஏனெனில் நம் மீட்பர் தாமே, தமது உத்தானத்தின்பின், திபேரியாக் கடலருகில் 3-ம் முறையாகத் தமது அப்போஸ்தலருக்குத் தரிசனையாகி, தம்மை அவர்கள் யேசுநாதசுவாமிதான்என்று விளங்கியபின், அப்பத்தையும் மச்சத்தையும் அவர்களுக்குப் பங்கிட்டு விருந்தளித்து, ஈற்றில், புனித இராயப்பரைப் பார்த்து, யோவானின் குமாரனுகிய சீமோனே; நீ என்னை இவர்களிலும் அதிகமாக நேசிக்கிறுயோ என்று இருமுறை வினவி, (புனி. அரு. 21-ம் அதி. 15-ம், 16-ம், 17-ம் வச.) "ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன்" என்று கூற, என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றவர், மூன்ரும் முறையும் அதே வினவிற்கு. நான் உம்மை நேசிக்கிறதை நீர் அறிவீரே ஆண்டவரே என்றவருக்கு, என் ஆட்டுக்குட்டிகளையும், ஆடுகளையும் மேய்ப்பாயாக என்று கட்டளையிட்டார். இப்புனித வாக்கு, ஆட்டுக்குட்டிகள் என்பது விசுவாசிகளையும், ஆடுகள் என்பது, ஆட்டுக் குட்டிகளுக்கு வழிகாட்டிச் செல்லும் மற்றும் ஆடுகளாகிய அப்போஸ்தலரையும் குறிக்கிறதல்லவா? ஆகவே, இப்புனித இறைவாக்கைக் கடைப்பிடித்தே புனித இராயப்பர் திருச்சபையின் தலைவனுனர். ஆகவே, மற்றும் அப்போஸ்தலரும், விசுவாசிகளும் அவரைத் தங்கள் திருச்சபையாம் பரி. குடும்பத்தின் தலைவராக ஏற்றுக் கொண்டனர். மதித்தனர். அவரது தெய்வீக அதிகாரத்தை அங்கீகரித்தனர். இதனை நாம் ஆரம்ப திருச்சபையில் இருந்தே, திருச்சபையின் தலைவராக அங்கீகரிக்கப்பட்டு தமது தலைவர் கடமையைத் திட்டவட்டமாக நடத்தினர் என்பதை வேதவாக்கியங்கள் வழியாக அறிகிறேம். (அப்போஸ். நடபடி. 1-ம்அதி. 15-ம்வச). "அந்நாட்களில் ஏறக்குறைய நூற்றிருபது பேர் ஒருமிக்கக் கூடியிருக்கையில் பரி. இராயப்பர் சகோதரர் நடுவே எழுந்து நின்று, சொன்னதாவது," என்ற வசனம், அவர் தமது தெய்வீக அதிகாரத்தைப் பாவித்து. யூதாஸ்காரியோத் தென்பவனுக்குப் பதிலாக, வேறொரு அப்போஸ்தலரைத்தெரிவதில் தலைமை தாங்கினர் என்பதை நமக்குத் தெளிவாக விளக்குகிறது. அந்தியும் 2-ம் அதி. 14-ம் வசனத்தில் கூறியிருக்கிறபடி, "அப்போது இராயப்பர் பதினெரு பேரோடுங்கூட நின்று, தமது சத்தத்தை உயர்த்தி அவர்களுக்கு வசனித்ததாவது, யூதர்களே! ஜெருசலேமில் வசிக்கும் சமஸ்த ஜனங்களே! என் வார்த்தைகளையும் உங்கள் காதுகளில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று தூயஆவியானவரைப் பெற்றபோது பேசத் தொடங்கி, யேசுநாதரையும் அவரது வாக்குத்தத்த வல்லபமாகிய தூயஆவியானவரையும், திருச்சபையையும், உலகமுடிவையும்பற்றி, பிதாவானவர் தீர்க்கதரிசிகள் வாயினுல் பலவருடங்களுக்கு முன் அறிவிக்கப்பட்டதையும் அவை நிறைவேறியிருப்பதையும் விளக்கிக்காட்டி, அப்பிரசங்கத்தினுல் மூவாயிரம்பேர் மனம் திரும்பி, ஞானஸ்நானம் பெற்றதையும் நாம் அறிகிறேம். இவ்வாறே பரி. இராயப்பரைப் பின்பற்றின ஆயர்கள் அன்றுதொட்டு இன்றுவரை முறைமுறையாக, திருச்சபையை தூயஆவியானவரின் உதவியுடன் பரிபாலித்துவருகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகள் இவ்வாறு ஒரே தலைவரின்கீழ் ஒன்றுயிருக்கும் பரி. கத். திருச்சபையின் தலைவர், இன்று யேசுநாதர் கூறிய வாக்கைப் பின்பற்றி, (புனி. அரு. 20-ம் அதி. 21-ம் வச.) "பிதா என்னை அனுப்பினதுபோல், நானும் உங்களை அனுப்புகிறேன்" என்ற வாக்கியத்தைக் கடைப்பிடித்து, தம மந்தைகளைத்தேடிப் புறப்பட்டார். அவர் தமது மந்தைகளை மாத்திரமல்ல, மந்தைகளைச்சேராத ஆடுகளையும் ஆட்டுக் குட்டிகளையும் தேடித்தான் வந்தார். (புனி. அரு. 10-ம் அதி. 16-ம்வச.) "இந்த ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளும் எனக்குண்டு. அவைகளையும் நான் கூட்டிச் சேர்க்கவேண்டும். அவைகளும் என்குரற் சத்தத்தைக் கேட்கும். அப்பொழுது ஒரே ஆட்டுக்கிடையும், ஒரே மேய்ப்பனும் ஆகும்" என்ற யேசுநாதரின் வாக்கை, அவரது பதிலாளியாகிய அவர், பணிவாகக் கீழ்ப்படிதலாக நிறைவேற்றினர். அதே நோக்குடன் நம் கீழ்த்தேசங்களை நோக்கி வந்தார். குரல் கொடுத்தார். ஆசீர்வதித்தார், பணிநிறைவேற்றி, திருவிருந்து பரிமாறினர். அவரது அன்பு உருவம், அருள் ஒழுகு வசனம், மாசற்ற புன்சிரிப்பு யாவும் சேர்ந்து மக்களைப் பரவசப்படுத்தினது. ஒவ்வொருவரினதும் உள்ளங்கள் அவரைப் பரிசுத்த தந்தை, அன்புத்தந்தை, நல்லஆயன் என்று வரவேற்றது. பிறசமயத்தவரே, அவரது வரவை நல்வரவாக மதித்தனர், களித்தனர், களிப்படைந்தனர் என்ருல், அவரது பிள்ளைகளாம் கத். கிறீஸ்தவர்கள் அடைந்த ஆனந்த அக்களிப்பை பேசவும் வேண்டுமா?

நாதன்.

# செல்வி மேரி ரேஸ் பிளசம் சாமுவேலின் வாழ்க்கை வரலாறு

மரணம் கள்ளனைப்போல எதிர்கொள்ளும் என்பது மறைவாக்கு. அதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆயின், மரணம் இவ்வளவு விரைவாக செல்வி ரோஜாவை எதிர்கொள்ளுமென எவருமே எதிர்பார்க்கவில்லை.

அப்படியா? இருக்காது; என்னுல் நம்பவே முடியவில்லை; நேற்றுத்தானே அவருடன் உரையாடினேன் என்றெல்லாம் வைகாசித் திங்கள் 17-ந்தேதி காலையில் யாழ்நகர தேவாலயங்களில் **செல்வி ரோஜாவின்** மரணச்செய்தி அறிவிக்கப் பட்டபோது மக்கள் தம்முள்ளே பேசிக்கொண்டனர்.

சேதிகேட்டுத் திடுக்குற்றனர் பலர்; திகைத்து நின்றனர் சிலர்; பதைபதைக்கும் நெஞ்சத்தினராய்ப் பண்டத்தரிப்புக் கிராமத்தை நோக்கிப் படையெடுத்தனர் பலர். ஜசிந்தா இல்லத்தில் ரோஜா நந்தவனம்அவர்களை வரவேற்றது. அங்கு தன் அன்னை, தந்தையரின் உயிரோவியங்கட்கு மத்தியில், கல்வி உலகில் பிளசம் ரீச்சர் எனவும், கலையுலகில் ரோஜாஅக்காஎனவும் அழைக்கப்பட்ட செல்வி மேரி றேஸ் பிளசம் சாமுவேல் மோனத்துயில் கொண்டிருந்தாள்.

குருமார் வந்தனர்; இறைபணியில் ரோஜாதந்த எழுத்துக்களை எண்ணியெண்ணிக் கண்ணீர் வடித்தனர். கன்னியர் வந்தனர்; இந்த இல்லறக் கன்னியின் நற்பண்புகளைச் சொல்லியழுதனர். மாணவியர் வந்தனர்; தங்கள் அறிவுப் பசியகற்றி, அறவழிச் செலுத்தி ஆன்மவிளக்கேற்றிய ஆசிரியை செயலற்றுக் கிடப்பதைகண்டு விம்மி விம்மியழுதனர்.

அன்பர்கள் திரள்திரளாக வந்தனர்; பிறர்நலனே தம் பணியாகக் கருதிச் செயலாற்றிய இச்செம்மலின் நிலைகண்டு நிலைதளர்ந்து வாய்விட்டாற்றினர்.



ஆயின் செல்வி ரோஜாவோ மண்ணகத்தில்என்பணிமுடிந்தது; விண்ணகத்தில் அதன் பயனை எதிர்நோக்கிச் செல்கின்றேன் எனக் கூறுபவள் போல புன்னகை பூத்த வதனத்தினளாய் நீங்காத துயில் கொண்டிருந்தாள்.

* * *

1934-ம் ஆண்டு வைகாசித் திங்கள் 18-ம்நாள், மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையில் சாமுவேல் செசிலியா அன்புத் தம்பதிகள் தங்கள் இல்லறப் பூங்காவின் இறுதிமலரைக் கண்டு களித்தனர். சிலதினங்களின் பின்னர் ஆடம்பர நிகழ்ச்சிகள் மத்தியில் தவத்திரு அல்பிறட் அடிகள் இம்மலருக்கு மேரி றேஸ் பிளசம்என நாமகரணஞ் செய்துவைத்தனர்.

ஆசிரிய பெற்றேரின் கீழ் ஆரம்பகல்வியை நல்லூரிலும் மண்டைதீவிலும் பெற்றுள் ரோஜா. பின்னர் இளவாலை கன்னியர் கலாலயம் தமிழிலும், ஆங்கிலத்திலும் சிரேஷ்ட தாரதரங்களைத் தந்தது. அடுத்துக் கொழும்புத்துறை புனிதவளனுர் ஆசிரியர் கல்லூரி இவரை வரவேற்றது. இருவருட ஆசிரிய பயிற்சியின்போது உத்தம மாணவியாகவும், மரியாயின் சைனியத் தலைவியாகவும் விளங்கினுர்.

1955. யாழ். திருக்குடும்ப கன்னியர் ஆங்கில கலாசாலை ரோஜாவை அன்புடனழைத்தது. 8-ம் வகுப்பின் பொறுப்பையேற்றுப் 16 ஆண்டுகள் அருஞ்சேவையாற்றினுர். வடமாநில ஆசிரிய சங்கத்தாரின் 8-ம் வகுப்புப் பரீட்சையில் வருடாவருடம் இவரதுமாணவிகள் முதன்மைச் சித்திகளும், திறமைச் சித்திகளும் ஏராளமாகப் பெற்று பிளசம் ரீச்சரின் திறமையை நாடறிய வைத்தனர்.

கத்தோலிக்க எழுத்தாளரான அண்ணன் வழிகாட்ட எழுத்துலகில் புகுந்தார் ரோஜா. சத்தியவேத பாதுகாவலன் வார ஏட்டின் மகளிர்மன்ற ஆசிரியையுமானுர், அவர் காவலனில் கடமையாற்றிய எட்டாண்டுகளும் (1962 —1970) காவலன் வரலாற்றில் ஒரு தனிச் சகாப்தமாகும். ரோஜா எழுதத் தொடங்கினுள். அவளது கற்பனைக்கடலில் இருந்து கவினுறு கவிதைகள் பல புகுந்தன. மறுமலர்ச்சிக் கட்டுரைகள், கருத்தாழங் கொண்ட கதைகள், குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும்நகைச்சுவைத் துணுக்குகள், உலகப் பெருமக்கள், புனிதர்களின் வரலாற்

(மறுபக்கம் பார்க்க)

# கிறிஸ்தவ திருமறைக் கல்விச் சபையின்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தையே காலத்துக்குக் காலம் நடந்தேறிவந்த திருச்சங்கங்களும் வலியுறுத்தி வந்திருக்கின்றன.

**ஆயர்களின் நிருபங்களிலே :**

மகாவந்தனைக்குரிய கருதினல் தோமஸ்கூறே ஆண்டகை அவர்கள், இதன் தேவையை உணர்ந்த அந்த நாட்களிலே ஒவ்வொரு பங்குகளிலும், கிறிஸ்தவ திருமறைக் கல்விச்சபையை தீவிரமாக உருவாக்க வேண்டுமென பங்குக் குருக்களையும், மற்றவர்களையும ஊக்குவித்து, சுற்று நிருபம் ஒன்று விடுத்ததையும் அறிவோம்.

இதன் காரணமாக இலங்கை மறை ஆயர்சங்கம் மறைக் கல்வித்தினத்தை நிறுவவேண்டும் என்றும், கிறிஸ்தவ திருமறைக் கல்விச்சபையின் திருநாளை திரித்துவ ஞாயிறு அன்று எல்லா இடங்களிலும் கொண்டாடி, இச்சபையின் தேவையை, முக்கியத்துவத்தை, பயனை மக்கள் உணரச் செய்யவேண்டும் என்றும் கோரியிருக்கின்றது.

**மக்களின் மனப்போக்கிலே :**

எமது பங்குகளிலே திரு இருதயக் கூட்டம், சூசையப்பர் கூட்டம், மாசில்லாமாதா கூட்டம், திரேசம்மாள் கூட்டம், ஞானப்பிரகாசியார் கூட்டம், மரியாயின் சேனைகள் இப்படியெல்லாம் எத்தனையோ பக்திச்சபைகளை பங்குத் தந்தையர்கள் உருவாக்கிச் செயல்படுத்துகின்றார்களே; இவ்வளவும் போதாதா ? இன்னுமொன்று திருமறைக்கல்விச்சபை என்ற பேரிலே உருவெடுக்க வேண்டுமோ ? என ஒரு சிலர் கருதக்கூடும் ! ஆம், எல்லா பக்திச் சபைகளுக்கும் பிறப்பிடமான, ஊற்றான இந்தப் பக்திச்சபை கட்டாயம் நிறுவப்படத்தான் வேண்டும். அதுமட்டுமல்ல, முதன்மையான இடத்தையும் பெற வேண்டும். இக்கல்விச்சபையின் உண்மையான இயக்கத்திலே மக்கள் செயல்படும் பொழுதுதான் இதன் முக்கியத்துவத்தையும் பயனையும் தெளிவாகக் கண்டு கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

**சபையின் நோக்கிலே :**

குடும்பம்தான் கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டில் என்ற இத்தினத்தின் உண்மை வாக்கிற்கேற்ப, பிள்ளைகளுக்கு உரிமையோடும், பெருமையோடும் மறைக்கல்வி கற்பிப்பதற்குப் பெற்றோரை ஊக்குவிப்பதும், கத்தோலிக்க பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் வயதிற்கும் சமயத்திற்கும் தகுந்தாற்போல் மறை அறிவூட்டி, விசுவாச வாழ்க்கைக்கு வழிகாட்டுவதும், பாடசாலைகளிலும் மற்றும் மறைக்கல்வி வகுப்புகளில் குறைகள் ஏற்படாதவாறு கவனிப்பதும், நாம் தனிப்பிறவிகள் இல்லை, குழுவாகக் கூட்டமாக வாழும் சமூகசீவிகள் என்ற முறையில் இறைவழிபாட்டுச் சடங்குகளில் குழுமுறையில் கூட்டமாகப் பங்குபெறச் செய்வதும், முக்கியமாகக் கத்தோலிக்கரல்லாத பிறமதச் சகோதரர்களுக்கு, திருமறையை, கிறிஸ்தவ அரசை அறிமுகப்படுத்துவதும் இச்சபையின் பரந்த, விரிந்த நோக்கில் அடங்கும்.

இப்பக்திச்சபையின் சேவையிலே ஈடுபட்டுச் செயலாற்ற தாராள மனதுடன் தம்மைக் கையளிக்கும் வளர்ந்தோரான ஆண்களும, பெண்களும் தேவைக்கேற்ற பிரகாரம் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பக்திச் சபையின் மறைக் கல்வித் திட்டத்தில் செயல் முறைகளில் பங்குபற்ற முடியாதவர்கள் தங்கள் செபங்களினுலும் காணிக்கைகளினுலும், நாட்டம் நல்லமனதினுலும் சபையின் வளர்ச்சிக்கு உதவிபுரிய முன்வரும்போது, துணை அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**சபையின் அமைப்பிலே :**

இச்சபை விசாரணைப்பங்கின் பாதுகாவலரின் புனித நாமத்தைக் கொண்டு, கிறிஸ்தவ திருமறைக் கல்விச்சபை பெயரிலே பங்கு மக்களின் விசுவாசவாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகத் துலங்கும்.

இச்சபையின் அங்கத்தவர்களை இயக்குனரும் ஞான வழிகாட்டியுமான குருவானவர்தாமே, ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவுக்கும், செயல் உறுப்பினர்களான, தலைவர், உபதலைவர், செயலர், பொருளர் என்போரை நியமிப்பார். ஒவ்வொரு குழுவின் பணிகளும் பரந்த நோக்கில், ஒன்று பிணைக்கப்பட்டதாக இருந்த பொழுதிலும் தனித்தனியே வெவ்வேறு விதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. முறையே ஆறு பிரிவுகளும், கற்பிப்போர் தரிசிப்போர், துணைபுரிவோர் மறைக் கல்வியூட்டும் பெற்றோர், அறிவுக்கழகத் தலைவர்கள், திருமறைத் தூதவர் என்ற நாமங்களிலே அழைக்கப்பெறுவர்,

எஸ். எவ். சவுந்தரம்

—வளரும்

# அமைதி கண்டாள் ரோஜா

அறிவு கொண்டாள் — நல்ல அழகு குன்றுள்
பொங்கும் அருளை உண்டாள் — அக்காள்
இன்று அமைதி கண்டாள்
எழுத்துலகில் ஏற்றமிகு தாரகை
கருத்துலகும் போற்றவல்ல கவி வாணி
மண்ணுலகில் மாசற்ற ஒளி — வாடாத
விண்ணுலகு சென்றுவிட்ட மலர் ரோஜா
எண்ணி எண்ணி ஏங்கிடினும் என்ன பயன் !
கண்ணில் நீந்தும் கடல் வழிந்தும் என்ன பயன் !
காலம் வென்றுள் — கலங்கும் இந்த
ஞாலம் வென்றுள்
வாழ்வை வென்றுள் — வளரும் அருள் கோலம் நின்றுள் !

இல்லை என்ற சொல்லறியா முல்லை இதழ்
தொல்லை பல வெல்லும் புன் சிரிப்புக்கு எல்லை அவள்
வல்லார்க்கு வல்லாள் — நல்லார்க்கு நல்லாள்,
இல்லை அவள் இன்று ! புகழ் உண்டு.
நினைவுண்டு — நிழல் உண்டு — நிகர் என்னே ?

ஏட்டினிலே பொறித்த பெயர் ரோஜா — அவள்
வீட்டினிலும் வளர்த்த மலர் ரோஜா — எம்
நாட்டினிலும் நிலைத்த புகழ் ரோஜா — என்
பாட்டினிலும் மலர்ந்த மண ரோஜா —

நீ. மரிய சேவியர்
"திருமறைக் கலாமன்றம்"

✠

**இறைவனில் மரித்த**

## 3-ம் ஆண்டு ஞாபகம்

என் இறைவா என் வாழ் நாளில் நான் உம்மையே விரும்பினேன்.

இன்று உமது நிழலில் நான் இருக்கிறேன்.

**திரு. க. அந்தோனி குலாஸ்**
**மறைவு : 29-5-68**

இவரின் ஆன்ம சாந்திக்காக நிகழும் வைகாசித் திங்கள் 29-ந் திகதி வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் திவ்வியபூசைப் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

சகோதர குருக்கள், கன்னியர்களையும் உறவினர் நண்பர்களையும் இவ்வான்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டு நிற்கும்.

திருமதி அ. கத்தரீன் பீரிஸ், பிரான்சிஸ் குலாஸ் அடியார், சங். சகோதரிகள் யூலியானு, மரியராறு, திரு. மரியதாஸ் குலாஸ், திருமதி. மெற்றில்டா அ. அல்பேட், திருமதி. செலின் அ. செய்சா, மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர் ஏனைய மற்றும் இனபந்துக்கள்.

வாழ்வில் நேசித்தவர்களே, மரணத்தில் மறவாதீர்கள்.

வங்காலை.

## தேவை

வவுனியா, மன்னர் மாவட்டங்களில் விவசாய இரசாயனப் பொருட்கள், இயந்திர உதிரிப்பாகங்கள் மோட்டார் வான்மூலம் விநியோகிப்பதற்கு அனுபவம்வாய்ந்த ஆட்கள் தேவை. ரொக்கப் பிணை ரூ. 5000 மும் இரண்டு பொறுப்பாளரின் உத்தரவாதமும் வேண்டும். மாதாந்த சம்பளம் ரூபா 150. கொம்மிஷனையும் சேர்த்தால் இத்தொகை ஏறக்குறைய மாதாந்தம் ரூபா 600-க்கு மேலாகும். சம்பந்தப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பக்காரர் விரும்பப்படுவர்,

பின்வரும் முகவரிக்கு எழுதுக :

**AUTOS LTD.,**
**JAFFNA.**

**நன்றித்துதி**

இரு வருடங்களாக என்னைப் பீடித்த வியாதி சகல வைத்தியர்களாலும் மாற்ற முடியாத வேளையில் புனிதை சதாசகாய மாதாவுக்கும் புனிதர் யூதாததேயு அப்போஸ்தலருக்கும் விண்ணப்பம் செய்தேன். அவர்களின் வேண்டுதலின் உதவியால் சுகம் காணப்படுகின்றது, பூரணசுகந்தரும்படியாக நேர்த்திப்பிரகாரம் பாதுகாவலனில் பிரசுரம் செய்கின்றேன்.

சருவேசுரனுக்கு நன்றி.

ஓர் அடியான்.

கட்டைக்காடு,
முள்ளியான். 62/71.

※ உயர்ந்த வளர்ச்சியின் உண்மையான குறிக்கோள் புதிய வெற்றிகளைப் பழமையோடு சேர்ப்பதும், புதிய நன்மைகளைத் திரண்டுள்ள கடந்தகால நன்மைகளோடு இணைப்பதுமேயாகும். சுருங்கச் சொன்னல், அனுபவத்தைக் கொண்டே முதலீடு செய்வதாகும்.

— பாப்பு 12-ம் பத்திநாதர்

# செல்வி மேரி றேஸ்....

[ 2-ம் பக்கத் தொடர்ச்சி]

றுக் காதைகள், சிந்தனைச் சிற்பங்கள் என்றெல்லாம் எழுதிக் குவித்தார்.

மொழிபெயர்ப்புக்கலை ரோஜாவுக்குக் கைவந்த கலை. எனவே குருமாரும், கன்னியரும் அடிக்கடி அவரைத்தேடி வந்தனர். பாப்பரசரின் நிருபங்கள், திருச்சபைச்சட்டங்கள், அறிவுரைகள், வத்திக்கான் சங்க அறிக்கைகள், திருக்குடும்பக் கன்னியர் நிறுவனக் கருத்தரங்குகள், சிஞெட்சங்க அறிக்கைகள் என ஏராளமான ஆங்கில பிரதிகளை அழகுத் தமிழில் மொழிபெயர்த்துதவியுள்ளார்.

ஆசிரியப்பணி, மறைபரப்புப்பணி என்பவற்றுடன் பொதுப்பணியிலும் ஈடுபட்டுழைத்தார் ரோஜா. இரத்ததானம், தேசியசேமிப்பு,கூட்டுறவு இயக்கம், காசநோய் ஒழிப்புஆகிய இயக்கங்கள்சம்பந்தமாக இவரியற்றிய சிறு நாடகங்கள், கட்டுரைகள்,கவிதைகள் இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பப் பட்டுள்ளன.

இத்தனை பணிகள் மத்தியில் பாயும் படுக்கையுமாகக் கிடந்த தன் அன்புத்தந்தைக்குப் பணிவிடை செய்வதிலும் மனங்கோணவில்லை. அதிகாலையிலெழுந்து தந்தைக்கான காலையுணவும், மதியஉணவும் தயார்செய்து, தந்தையின் அலுவல்களைக் கவனித்துப் பின்னர் பஸ்பிரயாணம் செய்து பாடசாலை செல்வர். மீண்டும் மாலையில் வீடுதிரும்பியதும், தந்தையின் அலுவல்களைக் கவனித்து, ரோஜா நந்தவனத்துக்கு நீரூற்றி,பின்னர் பாடசாலை அலுவல்கள், எழுத்துப்பணி என்பவற்றைக் கவனித்தே துயில் கொள்ளுவார். இங்ஙனம் ஐந்து வருடங்கள் அயராது உழைத்தார்.

இறைபணியிலும் பொதுப் பணியிலும் இடையறாது ஓய்வொழிவின்றி உழைத்தஅந்த உத்தமிக்கு ஓய்வுதர இறைவன் எண்ணியிருந்தார் போலும். 1970-ம் ஆண்டு மாசி மாதத்தில்ரோஜாவின் இடது கண் பார்வையை இழக்கத் தொடங்கியது. பிரபல நேத்திர நிபுணரின் சிகிச்சையும பலனளிக்கவில்லை. 1970 சித்திரையில் இடது கண்பார்வை முற்றாக மங்கிவிட்டது.

ரோஜாவின் எழுத்துப் பணிக்கு மருத்துவர்கள் தடை விதித்தனர். ஆயினும் தைரியமாக ஒற்றைக் கண்ணுடன் ஆசிரியபணியை மேற்கொண்டார். 1971 சித்திரையில் வலது கண்பார்வையும் மங்கத் தொடங்கியது. யாழ். அரசினர் மருத்துவமனையில் ரோஜா சேர்த்துக் கொள்ளப்பட்டார். சேதிகேட்டு அரசினர் மருத்துவமனையை முற்றுகையிட்டனர் திரளானநண்பர்களும், மாணவியரும். ரோஜாவின் நிலைகண்டு அழுது கண்ணீர்வடித்த அத்தனைபேருக்கும் தைரியமாகவும் துணிவாகவும் ஆறுதல்கூறி அனுப்பினர் ரோஜா.

வைகாசித்திங்கள் 7-ம்நாள் சத்திரசிகிச்சைக்காக ரோஜா விமானமூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு பிரதம மருத்துவமனையில் ஆசியாவிலேயே பிரபல்யம்பெற்ற மருத்துவ நிபுணர்கள் ரோஜாவைப் பரிசோதித்தனர். சத்திரசிகிச்சை செய்ய இயலாதுஎன வருத்தத்துடன் தெரிவித்தனர். இருதயத்தில் பலகோளாறுகளிருக்க அவை எதுவுமே வெளியே தெரியாமல் இத்தனை காலமும் ரோஜாசுகபெலத்துடன் வாழ்ந்தமையே ஒரு புதுமை என்றனர்.

ரோஜா மகிழ்ச்சியோடு ஜசிந்தா இல்லத்துக்குத் திரும்பி வந்தார். தம்மைப் பார்க்கவந்த கன்னியர்கள், நண்பர்களுடனெல்லாம் மகிழ்ச்சியோடு உரையாடினர்.

16-ந்தேதி காலை ரோஜா சிறிது வாந்தியெடுத்தார். தொடர்ந்து அறிவு மங்கியது. காலை 9மணிக்கு தவத்திரு சற். என். குருஸ் அடிகளார் இறுதிஅனுமானங்களை வழங்கினர். காலை 11 மணிக்கு மாண்புமிகு தியோகுப்பிள்ளை ஆண்டவரவர்கள் சேதிகேட்டு வந்தார். மரணப்படுக்கையில்இருந்த ரோஜாவுக்கு அப்போஸ்தலிக்க ஆசிவழங்கினர். பி. ப. 4மணிக்கு இனசனரும், நண்பர்களுமாகத் திரளானேர் கூடிநிற்க, அமைதியாக இவ்வுலகைவிட்டு தன் இதயஅன்பரின் இல்லம்நாடிப் பறந்துசென்றுர் ரோஜா.

மறுநாள் மாலை 3½மணிக்கு இறுதிஊர்வலம் ஆரம்பமாகி, சேமக்காலையை அண்மியது. **நெருங்கினேன் உமதண்டை என்தேவா** என்றகீதம் விண்ணைநோக்கி எழுந்தது. ரோஜாவின்சடலத்தைத்தாங்கிய பேழை மெல்லமெல்ல மண்ணுக்குள் இறங்கியது. எல்லோரும் விம்மி அழுதனர். அழுதுகொண்டேயிருந்தனர். அழுதுகொண்டிருந்தவர்க்கு ஆறுதல்கூறுவார் யாரையுமே காணவில்லை. ஏனெனில், ஆறுதல் கூறவேண்டியவர்கள் அனைவருமே அழுது கொண்டிருந்தனர்.

## பூசை வழிகாட்டி

### வைகாசி — 1971.

30. ஞாயிறு — பரிசுத்த ஆவி திருவிழா [சி]
1ஆம் வாசகம்: அப். பணி. 2: 1—11
2ஆம் வாசகம்: 1 கொரி. 12: 3—7, 12—13,
சுவிசேஷம்: அரு. 20: 19—23

31. திங்கள் — அரசியான புனித கன்னிமரி, [வெ]
வாசகம்: இசை. 9: 1—6
சுவிசேஷம்: லூக். 1: 39—47

### ஆனி — 1971

1. செவ்வாய் — நாள் பூசை [ப]
(அ) புனித மெரிசி ஆஞ்சலம்மா [வெ]
வாசகம்: 2 இரா. 3: 12—18
சுவிசேஷம்: அரு. மாற். 12: 13—17

2. புதன் — நாள் பூசை [ப]
(அ) புனித மார்செல்லின் [சி]
வாசகம்: 2 திமோ. 1: 1—3, 6—12
சுவிசேஷம்: மாற். 12: 18—27

3. வியாழன் — நாள் பூசை [ப]
(அ) புனித கரோலியும் துணைவரும் (சி)
வாசகம்: 2 திமோ. 2: 8—15
சுவிசேஷம்: மாற். 12: 28—34

4. வெள்ளி — நாள் பூசை [ப]
வாசகம்: 2 திமோ. 3: 10—17
சுவிசேஷம்: மாற். 12: 35—37

5. சனி — புனித பொனிபாஸ் [சி]
வாசகம்: திருவெளி. 7: 9—17
சுவிசேஷம்: அரு. 12: 24—26.

*சத்தியவேத பாதுகாவலன்*

## தூய ஆவியானவரும் பரிசுத்ததனமும்

மணலினும் பூஞ்சோலையினும் சிறுவர் விளையாடுகின்றனர். வசந்தத்தின் இளவெயில் அவர்களுக்கு இன்பமூட்ட அதன் இனிமையில் இலயித்து மெய்மறந்து விளையாடுகின்றனர். ஆனால் தமக்கு இதமளித்த அந்தச் சூரியனை எண்ணிப் பார்ப்பவர் மிகச் சிலரே.

காலம் செல்கின்றது. இந்தப்பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாக வேறு பிள்ளைகள் அங்கு விளையாடுவர். இளமை நிலை நிற்பதில்லை. சூரிய ஒளியின்கீழ் வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றவர்கள் பின்தளர்ந்து மாண்டு போகிறார்கள்.

ஆனால் இறைவனின் திருவருள் அப்படி அல்ல. அது வளர்ச்சியைத் தருகின்றது. ஆனால், தளர்ச்சியைத் தருவதில்லை. மக்களை என்றும் இளமை குன்றாதவராய் வாழச் செய்கின்றது. மோட்சராச்சியத்தில் பிரவேசிக்கும் படிக்கு அது எம்மைக் குழந்தைகளாக்குகின்றது. எந்தப் புயலாலும் இருளடையாத ஒளியையுடையதாய் என்றும் வாடாத மலர்களை மலரச் செய்யும் தேவ திருவருள் எங்கிருந்து வருகின்றது? தூய ஆவியானவரிலிருந்தேதான். பிதாவையும் சுதனையும் இணைக்கும் அன்பென்று அழைக்கப்படும் தூய ஆவியானவர் திருவருளின் ஊற்றாக இருக்கிறார். எமக்கு அருளப்படும் அருட்கொடைகள் யாவும் அவரது கொடையே. கிறிஸ்துநாதர் பரலோகத்துக்கு எழுந்தருளுமுன் அளித்த வாக்குறுதி இது. தமது இரண்டாவது வருகைவரை திருச்சபையையும் அதன் மக்களையும் தூய ஆவியானவரே வழி நடத்தி வருவார் என்று அவர் கூறியிருக்கிறார்.

தூய ஆவியானவரின் செயலைப்பற்றி பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலுமிருந்து அறிகிறோம். உலகின் படைப்பு, கிறிஸ்துவின் பிறப்பு, திருச்சபையின் ஆரம்பம், எமது ஆத்துமங்களில் அருள்வாழ்வின் உதயம் — இவை ஒவ்வொன்றிலும் தூய ஆவியே செயலாற்றினார். அத்துடன் அவர் அன்பின் உருவாக இருப்பதால், தம்மூலம் உண்டாக்கப்பட்டவற்றைக் காத்து போஷித்து வருகிறார். அவரே உலகை என்றும் புதுப்பிக்கிறார். இவ்விதம் அமைதியாக கண்ணுக்குத் தோன்றாத விதமாக செயலாற்றிக் கொண்டேயிருக்கும் தூய ஆவியானவரைப்பற்றி பெரும்பாலான மக்கள் சிந்திப்பதேயில்லை. பிதாவையும் சுதனையும் ஆட்களாக நினைவு கூர்ந்து அவர்களுக்கு அன்பு செலுத்தி ஆராதனை செய்யும் மக்கள் பலருக்கு தூய ஆவியானவர் புறாவாகவும் நெருப்பாகவுமே தோன்றுகிறார். அருவப் பொருளான அவருக்கு ஓர் உருவம் கொடுக்க எம்மால் முடியாவிட்டால் அவரது செயலாற்றலை மறந்துவிடுவதா? அவர் பரிசுத்த திரித்துவத்தின் மூன்றும் ஆள். அவர் ஓர் ஆள், ஒரு சின்னமல்ல. எனவே ஒரு தேவ ஆளுக்குரிய அன்பையும் உறவையும் அவரிடத்தில் நாம் கொண்டிருக்க வேண்டும்.

கருதினல் மேசியர் என்பவர் தூய ஆவியானவரிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவர். புனிதத்தன்மை அடைவதற்கு அவர் காட்டும் வழி தினசரி ஐந்து நிமிட அமைதியான தியானத்தின் மூலம் தூய ஆவியானவரின் ஆலயமாகிய ஆத்துமத்தில் அவரை வீற்றிருக்கச் செய்து, அவரது வழி நடத்துதலை வேண்டி, அவரது தூண்டுதலுக்கு இசைந்து நடப்போமெனவும் அவர் அனுமதிக்கும் சகலத்தையும் ஏற்றுக்கொள்வோமெனவும் வாக்குப் பண்ணி அவரிடம் மன்றாடுவதாகும். இதன் மூலம் தாம் அடைந்து கொண்ட அமைதியையும் மன ஆறுதலையும், சோதனைகளை மேற்கொள்ள உதவிய தேவ அருளையும் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் தூய ஆவியானவருக்குப் பணிந்து நடப்பதே புனிதத் தன்மையின் இரகசியமாகும் என்கிறார்.

## திருவருட் சாதனங்களைப் பெறுவதற்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தல்

(சங், சகோதரி செருபிம்)

அன்பு. அதுவே இறைவன்! தன்னையே பிறர்க்கு அளிப்பது அன்பு. மனிதன் மேல்இறைவன் அன்புகொண்டிருந்தார். தன்னையே மனிதனுக்கு அளித்தார். ஆனால் மனிதன் அக்கொடையை மதிக்காது மாறிவிட்டான். இறைவனோ என்றும் மாறாதவர்; மனிதனின் மறுவாழ்வுக்கு உதவுகின்றார்; மீட்புத் திட்டம் வகுக்கின்றார்.

இத்திட்டத்தின் மையமாக அமைகின்றார் கிறீஸ்து. கிறீஸ்துவின் மீட்பளிக்கும் செயல்கள்தான் திருவருட்சாதனங்கள். இறைதந்தையோடு நாம் ஒன்றுபடவேண்டுமா? இறைமகன் கிறீஸ்துவோடு நாம் ஒன்றுபட வேண்டும். மின்விளக்கு மின் சாரத்துடன் இணைந்தாற்றான் ஒளியை உமிழும். அவ்வாறே திருவருட் சாதனங்களும், அவை பயன் அளிப்பதும் அளிக்காததும் அவற்றைப் பெறுவோரின் மனநிலையைப் பொறுத்தே அமையும். எனவே, எவ்வளவுக் கெவ்வளவு தக்க தயாரிப்புடன் திருவருட் சாதனங்களைப் பெறுகிறோமோ, அந்த அளவிற்குத்தான் அவை நன்மை பயக்கும் என்பதை அறிதல் வேண்டும்.

இறையன்பை ஊட்டிவளர்க்கும் தொட்டிலாக அமைவது குடும்பம். கிறீஸ்தவ குடும்பம் மெய்விவாகம் என்னும் திருவருட் சாதனத்தால் உருவாகியது. திருமணமும் திருமண அன்பும் இறையன்பின் சின்னங்கள். இந்த அன்புச் சின்னங்களிற் பழுத்த நற்கனிகள்தான் நம் நாட்டுக் குழந்தைகள்! இவர்களை உருவாக்கி, கல்விபுகட்டி, இறையன்பில் நிறைவாக்கும் பொறுப்பு மிகமிகமுக்கியமானது.

பிள்ளை வளர்ப்பிற் பெரும் பங்கு கொள்வோர் இருவகையினர். ஒருவர் பெற்றோர்; மற்றவர் ஆசிரியர், குரு, சமூக இயக்குநர், விடுதிச் சாலைத் தலைவர்கள் முதலியோர் ஆவர். இவ்விரு வகுப்பினருள் பெற்றோரின் முக்கியத்துவம் கூறாமலே விளங்கும், சமுதாயத்தின் ஆணிவேராய் அமைவது குடும்பம். மனிதனின் வாழ்வை வளமாக்கும் முதற்பாடசாலையும் இதுவே. குழந்தையின் உயர்வு தாழ்வுக்கு முழுக் காரணியாய் இருப்பவள் அன்னை. அதனாற்றான் ஒரு பெரியார், “ஒரு நல்லதாய் நூறு ஆசிரியர்களுக்கு நிகராவாள்” எனக் கூறிப்போந்தார். பெற்றோரே! நீங்கள் உங்கள் பிள்ளைகளின் பிற்கால வாழ்வுக்குப் பொருள்தேடி வைக்கிறீர்கள். ஆனால், அவர்களை இறைமகன் யேசுவோடு உறவுகொள்ளச் செய்வதற்கு யாது செய்கிறீர்கள்? கிறீஸ்துவின் உயிரளிக்கும் செயல்களான திருவருட் சாதனங்களைப் பெறுவதற்கு உம்குழந்தைகளைத் தக்க பருவத்தில் ஆயத்தப் படுத்துகிறீர்களா? கிறீஸ்து, கிறீஸ்தவ குடும்பத்தைத் திருவருட் சாதனங்களின் வாய்க்காலாக உயர்த்தினார் என்பதை அறியீரோ?

குருமாரினரே! ஆசிரிய குலமே! மறைக்கல்விப் பயிற்சியுடன் தொடர்புகொண்ட மற்றும் சமூகத் தொண்டர்களே! உங்களுக்கும் ஒரு வார்த்தை! “நான் நட்டேன்; அப்போலோ தண்ணீர் பாய்ச்சினார்; ஆனால், வளர்த்தது கடவுளே” என்ற புனித சின்னப்பரின் கூற்றுக்கு நீங்களும் இலக்கானவர்கள். உங்கள் பணியும் இம்மேலான பணியே. உங்கள் அப்போஸ்தல பணி பன்மடங்கு பலனளிக்க வேண்டுமாயின், இறைமகனார் ஏற்படுத்திய திருவருட் சாதன வழியில் உங்கள் மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். இத்தகைய புனித பணியை உமதுபோதனையால் மட்டும் செய்து வெற்றிபெறுதல் என்பது பேதமை. முன்மாதிரிகை முதற்கண் தேவை. பலர் செய்வது போன்று வெளி ஆடம்பர அலங்கார உபசாரங்களில்அல்ல; ஆனால், குழந்தையின் உள்ளத்தைத் தகுந்த முறையில் ஆயத்தப் படுத்துவதிற்றான் இவ்வாயத்தம் தங்கியிருக்கின்றது.

பிறந்த குழந்தை முதற் பெறுவது திருமுழுக்காகும். இதற்குக் குழந்தையை உடனடியாக ஆயத்தப்படுத்தமுடியாதென்பது உண்மையே. அதற்குப்பதில் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களைத் தயாரித்தலைப் பெற்றோர் மேற்கொள்ளலாம். திருமுழுக்கினாற் குழந்தை இறைமகனுக்கப் படுகின்றது. எனவே, அது மோட்ச தனதையை அறிவது அவசியம். திருமுழுக்குச் சடங்கின்போது பெற்றோரதும், ஞானப்பெற்றோரதும், முழுக்கிறீஸ்தவ சமுதாயத்தினதும் கடமைகளைப் பற்றிச் சுருக்கமான ஓர் அறிவுரை இடம்பெறலாம். வசதிக்கேற்றபடி இத் திருச்சடங்கை ஒரு சமூகச் சடங்காக அமையச்செய்து, முழு விசாரணைப் பங்குமே குடும்பத்தில் இணைகின்ற புதிய அங்கத்தவரை வரவேற்கும்படி செய்யலாம். சமூகத்தினரின் ஞானஸ்நான அறிவையும், அவர்கள் தனித்தனியே கொடுத்துள்ள ஞானஸ்நான வாக்குத்தத்தங்களைப் பற்றிய அறிவையும் விருத்தி செய்ய இத்தகைய சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இவை வழியாகத் திருமுழுக்கின் கருத்துக்களைப் பிள்ளைகள் மீண்டும் மீண்டும் நினைவுகூருவதற்கு உதவலாம். இவ்விசுவாசச் சூழ்நிலை குழந்தையின் சிறிய கண்களுக்குத் தெளிவாக விளங்காவிட்டாலும், கால ஓட்டத்தில் உயிருள்ள விசுவாச வாழ்வாக மாறலாம்.

(வளரும்)

## ஐக்கிய அமெரிக்க தேசமும் குருமாரின் விரத்தத்துவமும்

இவ்வருடம் ஐப்பசி மாசத்தில் வத்திக்கானில் நடக்கவிருக்கும் உலக மேற்றிராணிமாரின் சினொட் கூட்டத்தில் ஐக்கிய அமெரிக்காவின் மேற்றிராணிமார் சபையின் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் குருமாரின் விரத்தத்துவத்தை ஆதரிப்பதில் அவர்களுக்கு உள்ள ஊக்கத்துக்குப் பெயர்பெற்றவர்கள்; அவர்கள் முறையே டித்ரோயிற் நகரக் கருதினல் டியாடன் அடிகளாரும், செயின் லூயிஸ் நகரக் கருதினல் கார்பெறி அடிகளாரும், பிலடெல்பியா நகரக் கருதினல் குரோல் அடிகளாரும், மினியாபொலிஸ்—செண் போல் பிரிவு மேற்றிராணியார் பைறன் அடிகளாருமே. வத்திக்கான் சினொட்டில் ஆலோசிக்கப்பட இருக்கும் பிரதான கருமங்களுள் குருமாரது சீவியமும் அவர்களது சேவையும் பிரதான இடத்தை எடுத்துக் கொள்ளும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நிக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் 29-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: 'கதலிக்பிறஸ்,' யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876.